# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 219/ந/2017

ஆணை எண். 56/2018

நாள் : 16/03/2018

திரு பி. சௌந்திரராஜன்,
மேட்டூர் அணை,
சேலம் – 636 456. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மேட்டூர். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, எண்.8/81A2, காந்தி நகர் முகவரியில் வசிக்கும் திரு P. சௌந்திரராஜன் அவர்களின் 09.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.11.2017 அன்று பெறப்பட்டு 219/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப் படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, எண்.8/81A2, காந்தி நகர் முகவரியில் வசிக்கும் திரு P. சௌந்திரராஜன் என்பவர் கீழ்க்காணும் கோரிக்கைகள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(i) 31.01.2009 அன்று ஓய்வு பெற்ற தனக்கு சேமநல நிதியில் சேர்க்கப்பட்ட (60%) 5–வது ஊதியக் குழுவின் தொகை வட்டியுடன் வழங்கவும் ;

(ii) 1993–94 ஆண்டு முதல் சேமநல நிதிக்கான வட்டித் தொகை;

(iii) 04.01.2012 நாளிட்ட 197/2010 எண்ணிட்ட நீதிமன்றப் பேராணை வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி வழங்கப்படவேண்டிய தொகை ;

(iv) தணிக்கைத் தடைக்காக பிடித்தம் செய்யப்பட்ட தொகை.

2. மேற்குறிப்பிட்ட மனுதாரரின் கோரிக்கைகள் குறித்து மேட்டூர் நகராட்சி நிர்வாக ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகை 2014–2015 வரை வழங்கப்படுவதற்கான பிரேரணைகள் 21.06.2016 நாளிட்ட கடிதத்தில் சென்னை, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி அலுவலரின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி ஆணையர் தனது 08.12.2017 நாளிட்ட கடிதம் எண்.4520/பி 3/2017-இல் தெரிவித்துள்ளார். மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகைகள் குறித்து சென்னை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் ஒப்புதல் பெற்றவுடன் மேலும் காலம் தாமதிக்காமல் மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகைகளை உடன் விடுவிக்குமாறு மேட்டூர் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது. இது சம்பந்தமாக மேட்டூர் நகராட்சி ஆணையரை தொடர்பு கொள்ளுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 16–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.**

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. **நகராட்சி ஆணையர்,**
   **மேட்டூர் நகராட்சி,**
   **மேட்டூர் அணை,**
   **சேலம்.**

2. **திரு பி. சௌந்திரராஜன்,**
   **கதவு எண்.8/81 ஏ2, காந்தி நகர்,**
   **மேட்டூர் அணை,**
   **சேலம் – 636 456.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**